# DEPOSITION OF WITNESS

## In the Court of Judicial Magistrate No.II, Mettur

**Case No : C.C. 699/2024**

**Prosecution witness : அ.சா.4** **Date : 03.02.2026.**

| Name : மாதையன் | Taluk : |
|---|---|
| Father's Name : | Calling : |
| Village : | Age : |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

1) நான் தற்போது மேட்டூர் மதுவிலக்கு அமலாக்க பிரிவில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2022ம் வருடம் மேச்சேரி காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்த போது கடந்த 09.11.2022ம் தேதி மேச்சேரி காவல் நிலையத்தில் நான் நிலையப் பொறுப்பில் இருந்த போது, ஓமலூர் அரசு மருத்துவமனையிலிருந்து கிடைக்கப்பெற்ற காயத் தகவலின் பேரில் முதல்நிலை காவலர் பிரபு அங்கு சென்று வாதி சதீஷ்குமார் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து என் வசம் ஒப்படைத்ததன் பேரில் புகார் வாக்குமூலத்தின் தன்மைக்கேற்ப **நி.கு.எண். 587/2023 u/Sec. 294(பி), 341, 323, 324, 506(2) IPC** ஆக வழக்கு பதிவு செய்தேன். புகார் வாக்குமூலம் **அ.சா.ஆ.3** ஆகும். முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ 4** ஆகும்.

2. பிறகு நான் புலன் விசாரணை நகலை எடுத்துக்கொண்டு கடந்த 09.11.2022 ம் தேதி காலை 11.30 மணிக்கு சம்பவ இடமான பெரியாண்டிச்சி அம்மன் கோவில் அருகே சென்று சாட்சிகள் ஆகாஷ் மற்றும் புகழ்கிரி ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்தேன். பார்வை மகஜர் மற்றும் வரைபடம் **அ.சா.ஆ 5** மற்றும் **அ.சா.ஆ 6** ஆகும்.

3. பின்பு சாட்சிகள் சதீஷ்குமார், ரவீந்திரன், மிதுன், சௌத்ரி, ஆகாஷ், பவளகிரி, முதல் நிலை காவலர் பிரபு மருத்துவர் சரவணன், ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இவ்வழக்கில் காயமடைந்த சதீஷ்குமார் என்பவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் சரவணன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். விபத்து பதிவேடு **அ.சா.ஆ–7** ஆகும்.

4. இவ்வழக்கின் எதிரிகளுக்கு கு.வி.மு.ச 41A ன் கீழ் அறிவிப்பு அனுப்பப்பட்டதால் கைது செய்ய மார்க்கமில்லை.

5. இவ்வழக்கின் புலன் விசாரணையில் எதிரிகள் மீதான குற்றம் உண்மை எனத் தெரிய வந்ததால் எதிரி மீது கடந்த 17.01.2023ம் தேதி **நி.கு.எண். 587/2023 u/Sec. 294(பி), 341, 323, 324, 506(2) IPC** ஆகிய பிரிவுகளின் கீழ் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்தேன்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>.**

6. நான் சொன்னவாறு சம்பவயிடம் செல்லாமல் சாட்சிகளை விசாரிக்காமல் எதிரி மீது இறுதி அறிக்கை காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்தேன் என்றால் சரியல்ல. வழக்கிற்கும் எதிரிகளுக்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

**ஒம்/– தே.மயில்சாமி**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2**
**மேட்டூர்.**